## தமிழ்நாட்டைத் தொடர்ந்து வஞ்சிக்கும்

# ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு முதல்வரின் அடுக்கடுக்கான கேள்விகள்!




## கேரளாவில் கனமழை:

# வேகமாக நிரம்பும் முல்லைப் பெரியாறு அணை! உபரி நீர் திறப்பு!

திருவனந்தபுரம், அக்.22-

கேரளாவில் வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்திருப்பதால், முல்லை பெரியாறு அணையின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் வெள்ளம் ஏற்பட்டிருக்கிறது. இதனால் அணைக்கு வரும் நீரின் அளவு உயர்ந்திருக்கிறது. நேற்று காலை நிலவரப்படி அணையின் 13 மதகுகளும் 1.5 மீ அளவுக்கு திறக்கப்பட்டிருக்கின்றன.

இந்நிலையில், மழை மேலும் தீவிரமடைந்தால் அணையிலிருந்து உப நீர் திறப்பு மேலும் அதிகரிக்கக்கூடும் என்று சொல்லப்படுகிறது. இதனால் அணையை ஒட்டியுள்ள பகுதிகளில் வெள்ளம் ஏற்படும் அபாயம் எழுந்துள்ளது.

முல்லை பெரியாறு அணையிலிருந்து நீர் திறக்கப்பட்டால் அது தமிழகத்திற்கு பெரிய அளவில் பாதிப்பை ஏற்படுத்தாது. ஏனெனில் அணையில் இருந்து இரண்டு வழிகளில் நீர் வெளியேற்றப்படும். அணையின் நீர்மட்டம் அதிகரிக்கும் போது தமிழக பகுதிக்கு திறக்கப்படும் நீர் நேரடியாக வைகை ஆற்றில் கலக்கிறது. இதனால் தமிழகத்திற்கு வெள்ள பாதிப்பு குறைவு. மாறாக லோயர் கேம்ப் நீர் மின் உற்பத்தி நிலையத்தில், மின் உற்பத்தியை இது அதிகரிக்கும். அதே நேரத்தில், தேனி மாவட்டத்தில் முல்லை பெரியாறு ஆற்றின் கரையோரம் உள்ள மக்களுக்கு லேசான பாதிப்புகள் ஏற்படலாம்.

தற்போது தேனியில் 500 வீடுகளை மழைநீர் சூழ்ந்திருப்பதற்கும், அணையின் நீர் திறப்பு ஒரு வகையில் காரணமாகும். ஆனால், தேனியில் பெய்த பருவமழையே நீர் தேக்கத்திற்கு பிரதான காரணம்.

மறுபுறம் கேரளா மாநிலம் வழியாவும் உபரி நீர் வெளியேற்றப்படுகிறது. இதனால் கேரளாவின் இடுக்கி மாவட்டத்தில் வல்லக்கடவு, வண்டிப்பெரியார், சப்பாத்து போன்ற பகுதிகளில் வெள்ளம் ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. எனவே முல்லை பெரியாறு அணையின் நீர்மட்டம் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது.

கேரளாவில் கனமழை தொடரும் என இந்திய வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது. குறிப்பாக வட கேரளாவில் மிக பலத்த மழை பெய்யும் என கணிக்கப்பட்டுள்ளது. மலப்புரம், கோழிக்கோடு, கண்ணூர் மற்றும் காசர்கோடு ஆகிய மாவட்டங்களுக்கு ஆரஞ்சு எச்சரிக்கையும், பத்தனம்திட்டா, கோட்டயம், இடுக்கி, எர்ணாகுளம், திருச்சூர், பாலக்காடு மற்றும் வயநாடு ஆகிய மாவட்டங்களுக்கு மஞ்சள் எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது. மேலும், கடல் அலைகள் சீற்றத்துடன் காணப்படும் என்பதால், மீனவர்கள் கடலுக்குச் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கனமழை காரணமாக கேரளாவில் உயிரிழப்பு ஏற்பட்டிருக்கிருக்கிறது. இடுக்கியில் பெய்த கனமழை ஒரு உயிர் பலியையும் ஏற்படுத்தியுள்ளது. வெள்ளரம்குன்னு அருகே இரவு 11:45 மணியளவில் ஏற்பட்ட மண் சரிவில் சிக்கி இருசக்கர வாகனத்தில் பயணித்த 66 வயதான பரப்பள்ளில் தாமஸ் என்ற தங்கச்சன் உயிரிழந்தார். அனவிலாசத்தில் உள்ள தனது ஹோட்டலை மூடிவிட்டு வீடு திரும்பும் வழியில் இந்த விபத்து ஏற்பட்டதாக வெள்ளரம்குன்னு பஞ்சாயத்து வார்டு உறுப்பினர் ராபின் கரக்கட்டு தெரிவித்துள்ளார். எனவே கேரளாவில் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டிருக்கின்றன.



கோவை மாநகராட்சி, மத்திய மண்டலம், 80வது வார்டில் பணிபுரியும் தூய்மைப் பணியாளர்கள் மற்றும் அலுவலக ஊழியர்களுக்கு பண்டிகையை முன்னிட்டு மாநகராட்சி பொது சுகாதாரக் குழுத்தலைவர் பெ.மாரிசெல்வன் பரிசுப் பொருட்களை வழங்கினார். இதில் பகுதி கழக பொறுப்பாளர் என்.ஜெ.முருகேசன், சுகாதார ஆய்வாளர் தனபால், உணவு பாதுகாப்பு அலுவலர் காமராஜ், வட்டக் கழக செயலாளர் நா.தங்கவேலன் உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## பருவ மழையை எதிர்கொள்ள

# நெல்லை மேற்கு மாநகர தி.மு.க. சார்பில் ஒருங்கிணைப்புக் குழு!

## மாநகரப் பொறுப்பாளர் சு.சுப்பிரமணியன் அறிவிப்பு!

நெல்லை, அக்.22-

பருவ மழையை எதிர்கொள்ள நெல்லை மேற்கு மாநகர தி.மு.க சார்பில் ஒருங்கிணைப்புக் குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது. பொது மக்களுக்கு உதவும் பணியில் ஈடுபட வேண்டும்.என நெல்லை மேற்கு மாநகர பொறுப்பாளர் சு.சுப்பிர மணியன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது.

நெல்லை மாநகர பகுதிகளில் பருவமழையால் பாதிக்கப்படும் பொதுமக்களுக்கு தேவையான அத்தியாவசிய தேவைகளை பூர்த்தி செய்ய நெல்லை மேற்கு மாநகர தி.மு.க பொறுப்பாளர் சு.சுப்பிர மணியன் தலைமையில் பகுதி வாரியாக ஒருங்கிணைப்புக் குழு தலைவர்கள் மற்றும் நிர்வாகி கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அதன்படி நெல்லை பேட்டை கிழக்கு பகுதிக்கு பகுதி பொறுப்பாளர் நமச்சிவாயம் என்ற கோபி மற்றும் மாநகர இளைஞர் அணி துணை அமைப்பாளர் அலிஃப் மீரான் 91994360 2232, மாநகர வர்த்தக அணி அமைப்பாளர் மகாராஜன் 9965267936,மாநகர அயலக அணி அமைப்பாளர் செந்தில்குமார் 9344095801,மாநகர நெசவாளர் அணி அமைப்பாளர் தளபதி ஆறுமுகம் 9789580386, மாநகர அயலக அணி துணை அமைப்பாளர் கணேசபெருமாள்9944628889, நெல்லை மேற்கு மாநகர மகளிர் துணை அமைப்பாளர் பிந்து செய்யது 9894578 750, நெல்லை பேட்டை மேற்கு பகுதிக்கு பகுதி பொறுப்பாளர் சங்கர், மாவட்ட வர்த்தக அணி தலைவர் அவதார் ஷாஜகான் 9442290613, மாநகர விவசாய அணி தலைவர் எஸ்.எஸ்.முத்து 9688643890, மாநகர சிறுபான்மை யினர் அணி சார்லஸ் முத்துராஜ் 9865167373,மாநகர தொழிலாளர் முன்னாள் துணை அமைப்பாளர் முத்து சுப்பிரமணியன் 9597895690, நெல்லை பேட்டை பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் சாதிக் 6385456655, துணை அமைப்பாளர்கள் மணிகண்டன் 9597944459, கோமதிநாயகம் 8778025 415, தச்சநல்லூர் வடக்கு பகுதிக்கு பகுதி பொறுப்பாளர் டாக்டர் சங்கர குமார், மேற்கு மாநகர மாணவரணி அமைப்பாளர் வினோத்குமார் 9944 357369, மாநகர பிரதிநிதி சிவா 9787671258, மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி முன்னாள் துணை அமைப்பாளர் சிவக்குமார் 994009 5688,மாநகர அமைப்பு சாரா ஓட்டுநர் அணி துணை அமைப்பாளர் முறுக்கு கடை கணேசன் 9790072 404,மாநகர தொழிலாளர் அணி முன்னாள் தலைவர் சங்கர் கணேஷ் 7448888855, மாநகர வர்த்தக அணி துணை அமைப்பாளர் கிருஷ்ணகுமார் 9442077 019, மாவட்ட சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர் முருகன் 8012460666 ஆகியோர் செயல்படு வார்கள்.

மேலும்அந்தந்த பகுதிக்குட்பட்ட வட்ட கழக செயலாளர்கள்,வட்ட கழக நிர்வாகிகள்,பாக முகவர்கள், வாக்குச்சாவடி டிஜிட்டல் முகவர்கள், தி.மு.க.சொந்தங்கள் ஆகியோர் இணைந்து கள பணியாற்றுவார்கள்.

நெல்லை மாநகர பகுதிகளில் பருவமழையால் ஏற்படும் மழை நீர் தேக்கம், மரம் விழுதல், மின்வெட்டு, மின்கசிவு ஆகிய பாதிப்புகள் ஏற்பட்டால் நெல்லை மாநகர தி.மு.க அலுவலகத்தை தொடர்பு கொள்ள வாட்ஸ் அப் மற்றும் தொலைபேசி எண் 87547 98163 ஆகிய எண்ணில் தொடர்பு கொள்ளலாம். பகுதி நிர்வாகிகள், மாநகர பிரதிநிதிகள், வட்ட செயலாளர்கள்,நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், சார்பு அணிகளின் நிர்வாகிகள் வார்டு வாரியாக பருவ மழை காலத்தில் பொதுமக்களுக்கு உதவும் பணிகளில் ஈடுபட வேண்டும்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.





கோவை வடக்கு மாவட்டம், மேட்டுப்பாளையத்தில் டி.ஆர்.சண்முகசுந்தரம் ஏற்பாட்டில் நல உதவிகளை வடக்கு மாவட்ட கழகச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி வழங்கினார். இதில் வழக்கறிஞர் இரா.ராஜீவ்காந்தி, அசரப் அலி, வெங்கடேஷ், முகமது யூனிஸ், வழக்கறிஞர் முனுசாமி பிரதீப், சிவக்குமார் உள்பட பலர் கலந்து கொண்டனர்.